Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 22.04.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவண குமார்

தேதி : 22.04.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் முதலாமாண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்தியா-ஜெர்மனி இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு வரும் 27ஆம் தேதி முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், மேற்கு வங்கத்தில் முதல் கட்டமாக 152 தொகுதிகளுக்கும் சட்டப் பேரவைத் தேர்தல் நாளை நடைபெறுகிறது.

*பஹல்காம் -1(02)*

பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் முதலாமாண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு…

**(வாய்ஸ்)**

*பஹல்காம் – வாய்ஸ் -2 (14)*

**(வாய்ஸ்)**

<u>கடந்த ஆண்டு இதே நாளில் ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் 26 சுற்றுலாப் பயணிகளை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். இந்த கோழைத்தனமான பயங்கரவாத செயலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கடந்த ஆண்டு மே மாதம் 6 மற்றும் 7ஆம் தேதிகளுக்கு இடைப்பட்ட இரவில் இந்திய ராணுவம் **ஆப்ரேஷன் சிந்தூர்** என்ற நடவடிக்கையை தொடங்கியது. இதில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலுள்ள 9 பயங்கரவாத முகாம்கள் துல்லியமாக அழிக்கப்பட்டதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.</u>

இந்த பயங்கரவாத தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர், இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தியுள்ளனர்.

*பஹல்காம் வாய்ஸ் -3(14)*

இந்த தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மக்களை என்றென்றும் நினைவுகூர்வதாகவும், அவர்களது குடும்பத்தினருக்கு இந்தியா எப்போதும் துணை நிற்பதாகவும் திருமதி திரௌபதி முர்மு, தமது சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தின் அனைத்து நடவடிக்கைகளையும், வெளிப்பாடுகளையும் எதிர்த்துப் போராடுவதில் இந்தியா உறுதியாக உள்ளது என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இந்தியா எந்தவிதமான பயங்கரவாதத்திற்கும் அடிபணியாது என்றும் இழிவான சதித் திட்டங்கள் ஒருபோதும் வெற்றி பெறாது என்றும் பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நாடு அஞ்சலி செலுத்துவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் திரு, அமித்ஷா உள்ளிட்டோர் இந்த தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக கூறியுள்ளனர்.

*பஹல்காம் -4 (07)*

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் முதலாமாண்டு நினைவு நாளில், ஐரோப்பிய யூனியன் இந்தியாவிற்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த 26 பேரை நினைவு கூரும் இந்த வேளையில் இந்திய மக்களுடன் துணை நிற்பதாகவும், அனைத்து விதமான பயங்கரவாத செயல்களையும் வன்மையாக கண்டிப்பதாகவும் ஐரோப்பிய யூனியன் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

*ராஜ்நாத் சிங் (10)*

இந்தியா-ஜெர்மனி இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். பெர்லினில் வாழும் இந்தியர்களிடையே உரையாற்றிய அவர், இரு நாடுகளுக்கிடையே கலை, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் நீண்டகால உறவு நிலவி வருவதாக அமைச்சர் கூறினார். ஐரோப்பாவில் இந்தியாவின்

மிகப்பெரிய வர்த்தக பங்கு நாடாக ஜெர்மனி திகழ்வதாக திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார். மேலும் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள், இந்தியாவில் செயல்பட்டு வருவதாக ஜெர்மனியில் வசிக்கும் 3 லட்சத்து 70 ஆயிரம் இந்தியர்களின் பங்களிப்பையும் திரு. ராஜ்நாத் சிங் சுட்டிக்காட்டினார்.

*மனோஜ் சின்ஹா (08)*

ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் பயணிகள் பேருந்து ஒன்று மலையிலிருந்து உருண்டு விழுந்ததில் 21 பேர் உயிரிழந்தனர். மேலும் 61 பேர் காயமடைந்தனர். ஜம்முவிலுள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் உடல் நிலை குறித்து, அம்மாநில துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா இன்று நேரில் சென்று ஆய்வு செய்தார். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய சாத்தியமான அனைத்து மருத்துவ உதவிகளையும் உறுதி செய்யுமாறு மருத்துவமனை நிர்வாகத்திற்கு அவர் அறிவுறுத்தினார்.

விபத்து நடந்த இடத்திலிருந்து பலர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி,

அம்மாநில துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, மத்திய அமைச்சர் டாக்டர் திரு. ஜிதேந்திர சிங், முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா ஆகியோர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணத் தொகையாக வழங்கப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

*புவி தினம் (05)*

புவி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சவால்களை உலகம் எதிர்கொண்டிருக்கும் வேளையில் இந்த ஆண்டுக்கான கருப்பொருள் "நமது ஆற்றல் நமது புவி" என்பதாகும். பூமியைப் பாதுகாப்பதன் அவசியத்தை, குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வலியுறுத்தியுள்ளனர்.

*காரைக்கால் தொழிற்பயிற்சி (15)*

2026ஆம் ஆண்டிற்கான ஓராண்டு கால தொழிற்பயிற்சி பெறுவதற்கு, தகுதியான மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக காரைக்கால் மாவட்டம், திருப்பட்டினத்தில் இயங்கி வரும் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. Computer Operator and Programming Assistant, Sewing Technology, Data Entry Operator மற்றும் Cosmetology ஆகிய 4 முக்கியப் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இதற்கு 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அல்லது தவறிய மாணவிகளும் விண்ணப்பிக்கலாம். விருப்பமுள்ள மாணவிகள் தங்களது மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் மற்றும் புதுச்சேரி மாநில குடியிருப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களுடன் பயிற்சி நிலைய முதல்வரை நேரில் அணுகி விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு 0463-82 34 248 மற்றும் 63 81 14 55 26 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி கல்வித்துறை (10)*

புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளிலுள்ள அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளும் கோடை விடுமுறைக்காக வரும் 27ஆம் தேதி முதல் மே மாதம் 31ஆம் தேதி வரை மூடப்பட்டிருக்கும் என்றும், விடுமுறை நாட்களில் மாணவர்களுக்கு சிறப்பு

வகுப்புகளோ அல்லது வேறு எந்த வகுப்புகளோ நடத்த அனுமதி இல்லை என்று பள்ளிக்கல்வித் துறை இணை இயக்குநர் திருமதி சிவகாமி சுற்றறிக்கையில் கூறியுள்ளார். கோடை விடுமுறைக்குப் பிறகு ஜூன் 1ஆம் தேதி பள்ளி மீண்டும் தொடங்கப்படும் என்றும், ஏப்ரல் 27ஆம் தேதி முதல் மே மாதம் 30ஆம் தேதி வரை அறிவிக்கப்பட்ட விடுப்பு பள்ளி தொடங்கிய பிறகு ஈடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*தமிழக தேர்தல் (03)*

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், மேற்கு வங்கத்தில் முதல் கட்டமாக 152 தொகுதிகளுக்கும் சட்டப் பேரவைத் தேர்தல் நாளை நடைபெறுகிறது. இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு...

**(வாய்ஸ்)**

*தமிழக தேர்தல் வாய்ஸ் -1 (15)*

**(வாய்ஸ்)**

<u>தமிழகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார். மேலும், 5 கோடியே 73 லட்சம் வாக்காளர்கள்</u>

உள்ளதாகவும், 14 லட்சத்து 59ஆயிரம் பேர் இந்த தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மகளிர் மட்டும் நிர்வகிக்கும் 325 வாக்குச்சாவடிகள் உட்பட தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவற்றில் 5 ஆயிரத்து 949 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என்று கண்டறியப்பட்டு, அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார். 1 லட்சத்து 20 ஆயிரம் காவல் துறையினர் தேர்தல் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 4 லட்சத்து 18ஆயிரத்து 541 தபால் வாக்குகள் பதிவாகியுள்ளதாகவும் கூறிய திருமதி அர்ச்சனா, இதுவரை 543 கோடி ரூபாய் ரொக்கம் உட்பட ஆயிரத்து 262 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

*தமிழக தேர்தல் வாய்ஸ் -2 (08)*

மேற்கு வங்கத்தில் ஆயிரத்து 478 வேட்பாளர்கள் களத்திலுள்ளனர். 44 ஆயிரத்து 376 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 5 ஆயிரத்து 444 வாக்குச்சாவடிகள் 100 சதவிகிதம் பெண்களால் நிர்வகிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. Balurghat,

Asansol மற்றும் Dakshin ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளில் மாற்றுத்திறனாளிகளால் செயல்படும் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடிகளும் web casting மூலம் கண்காணிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*தேர்தல் துறை புதுச்சேரி (18)*

தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் நாளை நடைபெறும் சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தலில், புதுச்சேரியில் பணிபுரியும், தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் வாக்களிக்க உரிமை பெற்ற வாக்காளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்று புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் அறிவுறுத்தியுள்ளார். புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள தனியார் துறை, தொழில்துறை, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், கட்டுமானத் துறை மற்றும் வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் உரிமையாளர்கள் தங்கள் ஊழியர்கள் வாக்களிக்கச் செல்ல முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும், அதிகபட்ச வாக்காளர் பங்கேற்பை உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதேபோல் புதுச்சேரியிலுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் வாக்குரிமை பெற்ற மாணவர்கள் தங்களது தொகுதிகளுக்குச் சென்று

வாக்களிக்கத் தேவையான விடுப்பு அல்லது அனுமதியை வழங்குமாறும் புதுச்சேரி மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் வலியுறுத்தியுள்ளார். மேலும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் அதிகபட்ச வாக்காளர் பங்கேற்புடன் நடத்துவது ஒவ்வொருவரின் பொறுப்பு என்றும், வலுவான ஜனநாயகத்தின் அடித்தளம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*காரைக்கால் மேம்பாலம் (10)*

காரைக்கால் மாவட்டத்தில் நடைபெற்று வரும் ரயில்வே மேம்பால கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பணிகளின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து ரயில்வே அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்திய அவர், பொதுமக்களின் போக்குவரத்து வசதி மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பணிகளை எவ்விதத் தாமதமுமின்றி விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். இதில் திருச்சி கோட்ட ரயில்வே நிர்வாகப் பொறியாளர் திரு. பாஸ்கரன் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

*காரைக்கால் கும்பாபிஷேகம் (12)*

காரைக்கால் மாவட்டம் அம்பகரத்தூரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற பத்ரகாளியம்மன் கோயிலில் நடைபெறவுள்ள கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பூர்வாங்கப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். விழாவிற்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தேவையான குடிநீர், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் சிறப்பாகச் செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய அவர், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து பணிகளைத் தாமதமின்றி முடிக்க உத்தரவிட்டார். கோயில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணியையும் பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது, கோயில் நிர்வாக அதிகாரி மற்றும் அரசுத் துறை சார்ந்த முக்கிய அலுவலர்கள் உடனிருந்தனர்.

*கிரிக்கெட் (08)*

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டித் தொடரின் இன்றைய ஆட்டத்தில், லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணி, ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.

இந்தியா-தென்னாப்பிரிக்க இடையேயான 3ஆவது மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டி இன்றிரவு 9.30 மணிக்கு ஜோஹன்னஸ் பர்க்கில் தொடங்குகிறது. 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் தென்னாப்பிரிக்கா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் முதலாமாண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்தியா-ஜெர்மனி இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு வரும் 27ஆம் தேதி முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், மேற்கு வங்கத்தில் முதல் கட்டமாக 152 தொகுதிகளுக்கும் சட்டப் பேரவைத் தேர்தல் நாளை நடைபெறுகிறது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது SS/MS/VM**